**DINAMALAR**

**Date: 19.06.2017**

---

# பொறியியல் கல்லூரி தரவரிசைப் பட்டியலில் முதலிடம்

ராஜபாளையம், ஜூன் 19–

ராஜபாளையம் ராம்கோ கல்லூரி அண்ணா பல்கலை தரவரிசைப் பட்டியலில் நான்காம் இடமும், தென்தமிழகத்தில் முதல் இடமும் பெற்றுள்ளது. இது குறித்து கல்லூரி முதல்வர் மகேந்திர கவுடா கூறியதாவது:

2013ம் ஆண்டு சிறந்த கட்டமைப்பு வசதிகளுடன் துவங்கப்பட்டு, சிறப்பம்சங்களுடன் விளங்கும் ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரி அண்ணா பல்கலை தரவரிசைப் பட்டியலில் முதல் ஐந்து இடங்களுக்குள் இடம் பிடித்து தொடர்ந்து சாதனை புரிந்து வருகிறது. அண்ணா பல்கலை தனது உறுப்பு கல்லூரிகளுக்கான ஏப்ரல்மே 2016, நவம்பர் டிசம்பர் 2016 நடைபெற்ற செமஸ்டர் தேர்வுகளில் தேர்ச்சி சதவிகித அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிட்டது. இதில் நவம்பர் – டிசம்பர் 2016 தேர்வில் ராம்கோ பொறியியல் கல்லூரி 92.6 சதவீதம் பெற்று 506 பொறியியல் கல்லூரிகளில் 5ம் இடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளது, என்றார்.

இதற்கான பாராட்டு விழா கல்லூரியில் நடைபெற்றது. இதில் நிர்வாக அலுவலர் செல்வராஜ், உதவிபேராசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ், துறை தலைவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். சிறப்பிடம் பெற்றதற்கு ராம்கோ குரூப் சேர்மன் பி.ஆர்.வெங்கட்ராமராஜா கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

**DINAMANI**

**Date: 18.06.2017**

# ராஜபாளையம் தொழில்நுட்பக் கல்லூரியில் தர மேம்பாட்டு பயிற்சி முகாம்

ராஜபாளையம், ஜூன் 17: விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் உள்ள ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை தர மேம்பாட்டுப் பயிற்சி முகாம் தொடங்கியது.

ராஜபாளையம் முடங்கியாறு சாலையில் உள்ள ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரி, கடந்த தேர்வில் 92.69 சதவிகித தேர்ச்சி பெற்று, அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்ட தர வரிசைப் பட்டியலில், 506 கல்லூரிகளில் 4 ஆம் இடத்தை இக்கல்லூரி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இக் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கான தர மேம்பாட்டுப் பயிற்சி முகாமையொட்டி, கணிதம், தகவல் தொழில்நுட்பம், இயந்திரவியல் உள்ளிட்ட பிரிவுகளில் தனித்தனியாக பயிற்சி நடைபெற்றது.

இந்த பயிற்சியில், சென்னை, நாகப்பட்டினம், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இயங்கி வரும் 20 தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணியாற்றும் 60-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

இப் பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்கு, தமிழகத்தின் தலைசிறந்த கல்லூரிகளில் பணியாற்றும் முதுநிலைப் பட்டதாரி விரிவுரையாளர்கள் பயிற்சி அளித்தனர். இப் பயிற்சி முகாம், ஜூன் 22 ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக, கல்லூரி முதல்வர் மகேந்திரகௌடா, கல்லூரி துணைப் பொதுமேலாளர் செல்வராஜ் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

## DINAKARAN

**Date: 17.06.2017**

### அண்ணா பல்கலைக்கமக காவரிசை பட்டியலில்

# ராம்கோ பொறியியல் கல்லூரி 4ம் இடம் பிடித்து சாதனை

**ராஜபாளையம், ஜூன் 17:** அண்ணா பல்கலைகழகம் வெளியிட்டுள்ள இன்ஜினியரிங் கல்லூரிக்கான தரவரிசை பட்டியலில் ராம்கோ பொறியியல் கல்லூரி 4ம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

தமிழகத்தில் உள்ள 506 பொறியியல் கல்லூரியின் தரவரிசை பட்டியலை அண்ணா பல்கலைக்கழகம் ஆண்டுக்கு இரண்டு முறை வெளியிடும். கடந்த மே 2016 தரவரிசை பட்டியலில் விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் உள்ள ராம்கோ பொறியியல் கல்லூரி 5வது இடத்தை தக்க வைத்திருந்தது. 2016 நவம்பர், டிசம்பர் வரையிலான பட்டியலை கடந்த 13ம் தேதி வெளியிட்டது. இதில் ராம்கோ பொறியியல் கல்லூரி நான்காம் இடத்திற்கு முன்னேறி சாதனை படைத்துள்ளது. இதற்காக கல்லூரி முதல்வர் மஹேந்திரகவுடா, நிர்வாக அலுவலர் செல்வராஜ், துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், மாணவ, மாணவியர் அனைவரையும் ராம்கோ குரூப்சேர்மன் பிஆர்.வெங்கட்ராமராஜா மற்றும் ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்கள் பாராட்டினர்.

இது குறித்து கல்லூரி முதல்வர் மஹேந்திரகவுடா கூறும்போது, ‘எங்கள் கல்லூரி தரவரிசை பட்டியலில் 4ம் இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளதை போல, மாநில அளவிலான போட்டிகளில் மாணவர்கள் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளனர். டேக்வாண்டோ போட்டியில் மாநில அளவில் முதலிடம், சோலார் வாகனத்தை புதியதாக வடிவமைத்தது, தண்ணீரை சேமித்து விவசாயம் செய்ய புதிய மொபைல் ஆப் கண்டுபிடித்தது உட்பட போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளை பெற்றுள்ளனர். அதிக மதிப்பெண் எடுக்கும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகையை ஆண்டுதோறும் வழங்குகிறோம். மாணவர்கள் சர்வதேச அளவில் சிறந்து விளங்க துறைவாரியான பயிற்சிகளும், பன்னாட்டு நிறுவனங்களில் வேலை பெறுவதற்கு மற்றும் உயர் கல்வி பெறுவதற்கு சிறப்பு வகுப்புகளும் நடத்தி வருகிறோம்’ என்றார்.

## THE HINDU

**Date: 14.06.2017**

# 100% result eludes Anna varsity colleges

### Show in Nov/Dec 2015 semester worst

SPECIAL CORRESPONDENT
CHENNAI

Anna University released the academic performance profile of its affiliated colleges for April/May 2016 on Tuesday. A comparison of the academic performance of the colleges in the last four semesters showed that no engineering college had posted 100% results.

Among the 10 colleges that have posted a pass percentage of over 90%, two are from Virudhunagar: Mepco Schlenk and Ramco. The latter, along with PSG Institute of Technology and Applied Research, Coimbatore, are both new institutions that have not yet sent out a single batch of students.

None of the colleges in Chennai or Kancheepuram, which are in high demand every year among students, has been featured. Only one college – RMD Engineering College, Thiruvallur – is in this category.

When compared to the performance in the four semesters – April/May 2016, November/December 2016, April/May 2015 and November/December 2015 – the performance has been worst in the Nov/Dec 2015 semester.

It may be recalled that there had been several student protests demanding postponement of the semester examination following the floods in December 2015.

During that semester, the pass percentage in almost 62% of colleges was below 50%.

**DINAMALAR**

**Date: 15.06.2017**

# இன்ஜி., படிப்பில் மத்திய அரசு கல்லூரி 'டாப்'

## தமிழக போக்குவரத்து கல்லூரியும் சாதனை

– நமது நிருபர் –

அண்ணா பல்கலையின் இணைப்பு கல்லூரிகளில், மத்திய, மாநில அரசின் இன்ஜி., கல்லூரிகள் அதிக தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளது.

ஆண்டுதோறும், இன்ஜி., படிப்பில் சேரும் மாணவர்களின் வசதிக்காக, கல்லூரிகளின் தேர்ச்சி தரவரிசை பட்டியலை, அண்ணா பல்கலை வெளியிடும். இந்த ஆண்டுக்கான பட்டியல், அண்ணா பல்கலையின், http://aucoe.annauniv.edu என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில், மத்திய, மாநில அரசின் கல்லூரிகள் அதிக தேர்ச்சி பெற்றுள்ளன. சேலத்திலுள்ள இந்தியகைத்தறிதொழில்நுட்ப நிறுவனமான, இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஹேண்ட்லூம் டெக்னாலஜி கல்லூரியில், டிச., தேர்வில், 95 பேர் பங்கேற்று, 90 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதேபோல், ஏப்., மே தேர்வில், 49 பேர் பங்கேற்று, 39 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழக அரசின் போக்குவரத்து துறை, ஈரோட்டில் நடத்தும், இன்ஸ்டிடியூட் ஆப் ரோடு அண்டு டிரான்ஸ்போர்ட் டெக்னாலஜி கல்லூரியில், 2016, டிசம்பரில், 1,739 பேர் தேர்வு எழுதி, 74.70 சதவீதமாக, 1,299 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 2016, ஏப்., மே தேர்வில், 1,777 பேர் பங்கேற்று, 79.63 சதவீதமாக, 1,415 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இது தவிர, அண்ணா பல்கலையின், 13 நேரடி உறுப்பு கல்லூரிகளில், ஏழு கல்லூரிகள், தனியார் கல்லூரிகளை மிஞ்சி, 60 சதவீத தேர்ச்சி பெற்றுள்ளன. திருநெல்வேலியிலுள்ள அண்ணா பல்கலை கல்லூரி, மிக மோசமான தேர்ச்சியை பெற்றுள்ளது.

### டிசம்பர் தேர்வில் அதிக தேர்ச்சி பெற்ற முதல் 10 கல்லூரிகள்

| வ.எண் | மாவட்டம் | கல்லூரி | தேர்ச்சி விகிதம் |
|---|---|---|---|
| 1. | சேலம் | இந்திய கைத்தறி தொழில்நுட்ப கல்வி நிறுவனம் | 94.74 |
| 2. | கோவை | பி.எஸ்.ஜி., இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி அண்ட் அப்ளைடு ரிசர்ச் | 94.65 |
| 3. | கரூர் | வி.எஸ்.பி., இன்ஜி., கல்லூரி | 93.47 |
| 4. | விருதுநகர் | ராம்கோ இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி | 92.69 |
| 5. | திருச்சி | கே.ராமகிருஷ்ணன் இன்ஜி., கல்லூரி | 91.48 |
| 6. | காஞ்சிபுரம் | ஸ்ரீசாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி | 91.16 |
| 7. | காஞ்சிபுரம் | ஸ்ரீசாய்ராம் இன்ஜி., கல்லூரி | 90.32 |
| 8. | திருச்சி | சாரநாதன் இன்ஜி., கல்லூரி | 90.09 |
| 9. | திருவள்ளூர் | வேலம்மாள் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி | 89.47 |
| 10. | திருச்சி | கொங்குநாடு இன்ஜி., கல்லூரி மற்றும் டெக்னாலஜி | 87.97 |

### உறுப்பு கல்லூரிகளில் 'டாப்'

காஞ்சிபுரம், 76.25; திருச்சி, 71.42; திருவண்ணாமலை, 67.90; தூத்துக்குடி, 66.35; திண்டுக்கல், 65.34; கன்னியாகுமரி, 63.52; விழுப்புரம், 63.26; கடலூர், 58.99; அரியலூர், 54.88; நாகை, 47.65; தஞ்சாவூர், 46.60; ராமநாதபுரம், 45.64; திருநெல்வேலி, 39.73 சதவீத தேர்ச்சி பெற்றுள்ளன.

# Oneindia

## தமிழக என்ஜீனியரிங் கல்லூரிகளின் தேர்ச்சி சதவீதம் வெளியீடு.. அண்ணா பல்கலைக்கழகம் அறிவிப்பு..!

சென்னை : தமிழகத்தில் என்ஜினியரிங் மாணவர் சேர்க்கையை கலந்தாய்வு மூலம் அண்ணா பல்கலைக்கழகம் ஆண்டு தோறும் நடத்தி வருகிறது. இந்த வருடம் என்ஜினியரிங் சேர்க்கைக்கு 1 லட்சத்து 40 ஆயிரத்து 451 பேர் விண்ணப்பித்து உள்ளனர். மாணவ மாணவிகள் கல்லூரிகளை தேர்வு செய்ய கடந்த ஆண்டு கட்-ஆப் மதிப்பெண் அண்ணா பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்பட்டது. ஆனால் அந்த கல்லூரிகளின் தேர்ச்சி சதவீதம் என்ன என்பது அவர்களுக்கு தெரியாத நிலை இருந்தது. எனவே கல்லூரிகளின் தேர்ச்சி சதவீதத்தை வெளியிட அண்ணா பல்கலைக் கழகத்துக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவு வெளியிட்டு இருந்தது.

அதன் படி அண்ணா பல்கலைக்கழகம் கல்லூரிகளின் தேர்ச்சி சதவீதத்தை நேற்று வெளியிட்டது. அதில் அண்ணா பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்ற அரசு என்ஜினியரிங் கல்லூரிகள், சுயநிதி என்ஜினியரிங் கல்லூரிகளில் 2016 ஏப்ரல், டிசம்பரில் செமஸ்டர் தேர்வுகளுக்கு எத்தனை மாணவர்கள் அனுப்பப்பட்டனர், அவர்களில் எத்தனை பேர் தேர்ச்சி பெற்றனர் தேர்ச்சி சதவீதம் உள்ளிட்ட விபரங்கள் அண்ணா பல்கலைக்கழக இணைதளத்தில் (www.coe.annauniv.edu) வெளியானது. 2016 டிசம்பர் மாத தேர்வு முடிவுகளின் அடிப்படையில் முதல் 10 இடங்களை பிடித்த என்ஜினியரிங் கல்லூரிகள் விரவம் முதல் 10 இடங்கள்

1. இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் ஹேண்ட்லூம் டெக்னாலஜி கல்லூரி - சேலம் (97.74 சதவீதம் தேர்ச்சி)

2. பி.எஸ்.ஜி. இன்ஸ்டிட்டியூட் ஆப் டெக்னாலஜி அன்ட் அப்ளைடு ரிசர்ச் - கோவை (94.65 சதவீதம் தேர்ச்சி)

3. வி.எஸ்.பி என்ஜினியரிங் கல்லூரி - கரூர் (93.47 சதவீதம் தேர்ச்சி)

4. ராம்கோ இன்ஸ்டிட்டியூட் ஆப் டெக்னாலஜி - விருதுநகர் ( 92.69 சதவீதம் தேர்ச்சி)

5. கே. ராமகிருஷ்ணன் என்ஜினியரிங் கல்லூரி - திருச்சி ( 91.48 சதவீதம் தேர்ச்சி)

6. ஸ்ரீசாய்ராம் இன்ஸ்டிட்டியூட் ஆப் டெக்னாலஜி - காஞ்சிபுரம் (91.16 சதவீதம் தேர்ச்சி)

7. ஸ்ரீ சாய்ராம் என்ஜினியரிங் கல்லூரி - காஞ்சிபுரம் (90.32 சதவீதம் தேர்ச்சி)

8. சாரநாதன் என்ஜினியரிங் கல்லூரி - திருச்சி (90.09 சதவீதம் தேர்ச்சி)

9. வேலம்மாள் இன்ஸ்டிட்டியூட் ஆப் டெக்னாலஜி - திருவள்ளூர் (89.47 சதவீதம் தேர்ச்சி)

10. கொங்குநாடு என்ஜினியரிங் கல்லூரி மற்றும் டெக்னாலஜி - திருச்சி (87.97 சதவீதம் தேர்ச்சி)

Source : http://tamil.careerindia.com/news/anna-university-has-published-pass-percentage-tamilnadu-002225.html